# பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த
# * ரஹஸ்யத்ரய விவரணம்

ஓரொன்றில் அநுக்தங்களாய், அவச்யம் ஜ்ஞாதவ்யங்களான அர்த்தவிசேஷங்களுக்கு விவரணமாகையாலே, அதிலே ரஹஸ்யத்ரயமும் ஒருவனுக்கு ஜ்ஞாதவ்யமாகக்கடவது. எத்தை எது விவரிக்கிறதென்னில்.—

ஸவிபக்திகமான அகாரத்தை அநந்தராக்ஷரத்வயம் விவரிக்கிறது. அவ்வக்ஷரத்வயத்தையும் மந்த்ரசேஷபதத்வயம் விவரிக்கிறது. அப்பதத்வயத்தையும் த்வயத்தில் வாக்யத்வயம் விவரிக்கிறது. அவ்வாக்யத்வயத்தையும் சரமச்லோகத்தில் அர்த்தத்வயம் விவரிக்கிறது. அதில் அகாரத்தை அக்ஷரத்வயத்தில் ப்ரதமாக்ஷரம் விவரிக்கிறது. விபக்தியை அநந்தராக்ஷரம் விவரிக்கிறது. இதில் ப்ரதமாக்ஷரர்த்தை ப்ரதமபதம் விவரிக்கிறது. அநந்தராக்ஷரத்தை அநந்தரபதம் விவரிக்கிறது. இதில் ப்ரதமபதத்தை ப்ரதமவாக்யம் விவரிக்கிறது. அநந்தரபதத்தை அநந்தரவாக்யம் விவரிக்கிறது. இதில் ப்ரதமவாக்யத்தைப் பூர்வார்த்தம் விவரிக்கிறது. உத்ரவாக்யத்தை உத்தரார்த்தம் விவரிக்கிறது. இதில் சேஷத்வப்ரதிஸம்பந்தியைச் சொல்லுகிற அகாரத்துக்கு அநந்யார்ஹசேஷத்வவாசகமான உகாரம் விவரணமானபடி எங்ஙனே? என்னில்: அகாரவாச்யனுடைய சேஷித்வம் ஆச்ரயாந்தரங்களிலும் கிடைக்குமோ? அநந்யஸாதாரணமாயிருக்குமோ? என்று ஸந்திக்தமானால், அதனுடைய அநந்யஸாதாரணத்வப்ரகாசகமாகையாலே, உகாரம் அகாரவிவரணமாகிறது. எங்ஙனேயென்னில்: உகாரத்தில் சொல்லுகிற சேதனனுடைய அநந்யார்ஹ சேஷத்வம் ஸித்திப்பது அதற்கு ப்ரதிஸம்பந்தியான சேஷித்வம் ஓரிடத்திலிளைப்பாறில்; அங்ஙனன்றியிலே, அநேகம் சேஷிகளாகில், அநந்யார்ஹசேஷத்வம் ஸித்தியாது. அந்யராயிருப்பார் சில சேஷிகள் உண்டாகில் அந்யசேஷத்வம் ஸித்திப்பதொழிய அநந்யார்ஹசேஷத்வம் ஸித்தியாது.

ஆகையாலே அகாரவாச்யனுடைய ஸமாப்யதிகதாரித்ர்யத்தைச் சொல்லிற்றாயிற்று. சதுர்த்தியில் சொல்லுகிற சேஷத்வத்துக்கு ஆச்ரயவிசேஷப்ரகாசகமாய்க் கொண்டு விவரணமாகிறது மகாரம். நிராச்ரயமாக தர்மத்தின் ஸ்திதியில்லையே. பகவத்வ்யதிரிக்தரைத் தன்னோடு பிறரோடு வாசியற அந்யராகச்சொல்லி, அவர்களில் அந்யதமன் சேதனன் என்கிறது உகாரம் இதில் கழியுண்கிற தேவதாந்தராதிமாத்ரத்தாலே அந்யசப்தத்துக்குப் பூர்த்தியில்லாமையாலே அவ்வந்யசப்தத்தில் அந்விதனான தன்னையும் கழித்து, அநந்யார்ஹதையைப் பூரிக்கிற முகத்தாலே உகாரவிவரணமாகிறது நமச்சப்தம். **‘‘அஹமபி ந மம பகவத ஏவாஹமஸ்மி’’** என்கிறபடியே ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத அத்யந்தபாரதந்த்ர்யத்தைச் சொல்லுகிறது நமச்சப்தத்திலேயிறே; ஆகையாலே

* இந்த க்ரந்தம் ‘ரஹஸ்யத்ரய தீபிகை’யில் சிறிது மாறுதல்களுடன் காணப்படுகிறது.

உகாரவிவரணமாகிறது நமச்சப்தம். சேஷத்வத்துக்கு ஆச்ரயவிசேஷப்ரகாசகமான மகாரவாச்யனுடைய சேஷத்வபூர்த்திபிறப்பது **'அகிஞ்சித்கரஸ்யசேஷத்வாநுபபத்தி:'** என்கிறபடியே கிஞ்சித்காரத்தாலேயாகையாலே, கிஞ்சித்காரப்ரகாசகமாய்க்கொண்டு மகாரவிவரணமாகிறது நாராயணபதம். அத்யந்தபாரதந்த்ர்யப்ரயுக்தமாய் வருகிற உபாய விசேஷத்தினுடைய ஸ்வரூபமென்ன, இதிலிழிகைக்கு ஏகாந்தமான துறையென்ன, இவ்வுபாயவிசேஷமாகச்செய்யவேண்டும் அம்சமென்ன, இவற்றைப்ரகாசிப்பிக்கை யாலே நமச்சப்த விவரணமாகிறது, த்வயத்தில் பூர்வவாக்யம். கைங்கர்யப்ரதிஸம்பந்தி ஒரு மிதுநமென்னுமிடத்தையும், அதற்குக்களையானவற்றையும் கழித்துத் தருகையாலே நாராயணசப்தத்துக்கு விவரணமாகிறது உத்தரவாக்யம். அவ்வுபாயஸ்வீகாரம்ஸாத நாந்தரநிவ்ருத்திப்பூர்வகமாகையாலே, தத்ப்ரகாசகமாய்க்கொண்டு பூர்வவாக்யத்துக்கு விவரணமாகிறது பூர்வார்த்தம். உத்தரவாக்யத்தில் சொன்ன ப்ராப்யஸித்தி விரோதி நிவ்ருத்திபூர்வகமாகக்கடவதென்று விவரணமாகிறது உத்தரார்த்தம்.

ஸர்வாதிகாரமாயும், அதிக்ருதாதிகாரமாயும், அர்த்தத்ரயாத்மகமாயும் இருக்கும். இதில் **"ஸ்ரீமந்"** என்கிற பதம் புருஷகாரம். **"சரணம் ப்ரபத்யே"** என்கிறபதம் அதிகாரிக்ருத்யம். நடுவில் **"நாராயணசரணௌ"** என்கிறபதம் உபாயம். உபாயம் புருஷகாரஸாபேக்ஷமாயும் அதிகாரிஸாபேக்ஷமாயும் இருக்கும். பலத்தில் வந்தால் அந்ய நிரபேக்ஷமாய் இருக்கும். உத்தரவாக்யமும் பதத்ரயாத்மகமாயிருக்கும். இதில் **"ஆ"** என்கிறவிடம் கைங்கர்யத்தைச் சொல்லுகிறது. இதுக்குக்கீழ் கைங்கர்யப்ரதிஸம்பந்தி யைச் சொல்லுகிறது. மேலில் பதம் கைங்கர்யத்தில் களையறுக்கிறது.

ரஹஸ்யத்ரய விவரணம் முற்றிற்று

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

---